# என்னைச் சந்தித்தது எதற்காக?

**பின்பு கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்குத் தரிசனமானார். அவன் பகலிலே உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்து, (ஆதி 18:1)**

சோதோமை அழிக்கும்படியாக ஆண்டவரும் (ஆதி. 18:2,3), இரண்டு தூதர்களும் (ஆதி. 19:1) புறப்பட்டு வந்தபோது, நேரடியாக சோதோமுக்குள் அவர்கள் புகுந்துவிடவில்லை. **அழிக்கப்படவேண்டிய சோதோமை நோக்கிச் செல்லும் முன்பதாக, அழைக்கப்பட்டவனாகிய ஆபிரகாம் வசிக்கும் வழியாகவே அவர்கள் வருகின்றனர்**. துன்மார்க்கர்களை நேரடியாகச் சென்று ஆண்டவர் அழித்துவிடுவதில்லை; ஒருமுறையாவது தன்னை அவர்களுக்கு அறிவிக்க அழைக்கப்பட்டவர்களைத் தேடுகின்றார். நமது இதயக் கதவை என்றோ அவருக்குத் திறந்துகொடுத்திருக்கலாம்; ஆனால், இன்று அவர் நிற்பதோ, நாம் நமது வீட்டை விட்டு வெளியேறி அழிவிலிருப்பவர்களுக்கு அவரை அறிவிக்கவேண்டும் என்பதற்காகவே. **"நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்துபோகவேண்டாம்"** (ஆதி. 18:3) என்று சொன்ன ஆபிரகாம், காரணத்தை முதலில் அறியாதவனாயிருந்ததால், **"நீங்கள் உங்கள் வழியே போகலாம்"** (ஆதி. 18:5,16) என்று வழியனுப்பிவைத்தான்.

**நோவாவின் நாட்களில்,** மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார் (ஆதி 6:5-7); என்றபோதிலும், அந்த சந்ததியைச் சந்திப்பதற்காக **நோவாவைச்**

**சந்தித்தார்** ஆண்டவர். நோவா “நீதியைப் பிரசங்கித்தான்” (2 பேதுரு 2:5). நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி 6:8); என்றாலும், **இந்தக் கிருபையினால் தான் மட்டும் காப்பாற்றப்பட்டால் போதும் என எண்ணாமல், மற்றவர்களும் காப்பாற்றப்படவேண்டும் என்று பிரசங்கித்தான் நோவா**.

**நினிவேயின் அக்கிரமத்தைக் கண்டு** யோனாவைச் சந்தித்தார். நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் **பிரசங்கி**; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது என்றார் கர்த்தர் (யோனா 1:2). சந்திப்பின் காரணத்தை அறிந்துகொள்ளாமல், சமுகத்தினின்று விலகி ஓடிய யோனாவை காற்றின் வலையைக் கொண்டு வீசி, மீனைத் தூண்டிலாக்கி கரைக்குக் கொண்டுவந்தார் ஆண்டவர். மனிதன்தானே மீனைப் பிடித்து கரைக்குக் கொண்டுவரவேண்டும்; ஆனல், இங்கோ, மனிதனைப் பிடித்து மீன் கரைசேர்க்கிறது. கப்பலில் நினிவேக்குப் போயிருக்கவேண்டிய அவனை “மீனிலே கொண்டுபோனார்” ஆண்டவர்; **சிலருக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதுண்டு**. நினிவேயின் கரையிலே கக்கப்பட்ட பின்பு, மீண்டும் கர்த்தர் யோனாவை நோக்கி: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் **பிரசங்கி** என்றார் (யோனா 3:2); மனமாற்றம் உண்டாயிற்று. **கர்த்தர் நம்மைச் சந்திக்கும் நோக்கத்தை நாம் அறிந்துகொள்ளாவிட்டால், சந்ததியாரின் அழிவுக்குக் காரணமாகிவிடுவோம்**.

கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை **அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு**; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் (யாத் 32:9,10) என்று சொன்னபோது, உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும் என்று **கெஞ்சிப் பிரார்த்தித்தான்**. அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த **தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்**. (யாத். 32:11-14). சந்திப்பைப் புரிந்துகொண்டால், சந்ததியைக் காத்துக்கொள்ளலாம்.